ASS

# மூன்றாம் பருவம் – தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு – 2025

6 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4 X 1 = 4

1. குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் தொழில் எது?
   அ) கொள்ளையடித்தல் ஆ) ஆநிரை மேய்த்தல்
   இ) வேட்டையாடுதல் (மற்றும்) சேகரித்தல் ஈ) வேளாண்மை
2. குப்த வம்சத்தை நிறுவியவர் .................. ஆவார்.
   அ) முதலாம் சந்திர குப்தர் ஆ) ஸ்ரீகுப்தர் இ) விஷ்ணுகோபர் ஈ) விஷ்ணு குப்தர்
3. இந்தியா ................ உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது.
   அ) துத்தநாகம் ஆ) மைக்கா இ) மாங்கனீசு ஈ) நிலக்கரி
4. தேசிய ஊராட்சி தினம் ......................... ஆகும்.
   அ) ஜனவரி 24 ஆ) ஜூலை 24 இ) நவம்பர் 24 ஈ) ஏப்ரல் 24

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 4 X 1 = 4

5. காவிரியாற்றின் குறுக்கே கல்லணையை ............... கட்டினார்.
6. இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சியின்போது சீனாவைச் சேர்ந்த பௌத்தத் துறவி ............ இந்தியாவிற்கு வந்தார்.
7. உலகின் மிக அதிக மழைபெறும் இடம் .................. .
8. மக்களாட்சிக்கான வரையறையை வகுத்தவர் ................ .

**III பொருத்துக.** 4 X 1 = 4

| | | |
|---|---|---|
| 9. | வானவர் | - கிரீன்விச் |
| 10. | பல்லவர் | - மாநிலத் தேர்தல் ஆணையம் |
| 11. | 0° தீர்க்க கோடு | - சேரர் |
| 12. | உள்ளாட்சித் தேர்தல் | - காஞ்சி |

SIVANANDHA K M.A.,B.Ed
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

**IV சரியா? தவறா?** 4 X 1 = 4

13. சங்க காலத்தில் பாடல்களைப் பாடுவோர் இருளர் என அழைக்கப்பட்டனர்.
14. 'புத்த சரிதம்' அஸ்வகோஷரால் எழுதப்பட்டது.
15. குப்தர்களின் ஆட்சிக் காலத்தில் உடன்கட்டை ஏறும் பழக்கம் இல்லை.
16. தேவாரம் ஆழ்வார்களால் இயற்றப்பட்டது.

**V அ) கூற்றைக் காரணத்துடன் பொருத்திப் பார்த்து சரியான விடையைக் கண்டுபிடிக்கவும்.** 3 X 1 = 3

17. **கூற்று 1 :** இந்தோ – கிரேக்க ஆட்சியாளர்கள் அச்சு முறையை அறிமுகம் செய்து சின்னங்களும் உருவங்களும் பெயர்களும் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டனர்.
    **கூற்று : 2** இந்தோ – கிரேக்கர்களின் ஆட்சியைக் குஷாணர் முடித்து வைத்தனர்.
    அ) கூற்று 1 தவறு, ஆனால் கூற்று 2 சரி ஆ) கூற்று 2 தவறு, ஆனால் கூற்று 1 சரி
    இ) இரண்டு கூற்றுகளுமே சரி ஈ) இரண்டு கூற்றுகளுமே தவறு



www.Padasalai.Net
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ஆ) கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க.

18. 1) புவி கோள வடிவமாகக் காணப்படுகிறது.
2) புவியின் வடிவம், ஜியாய்டு என அழைக்கப்படுகிறது.
3) புவி தட்டையான வடிவத்தில் உள்ளது.
மேற்கூறிய கூற்றுகளில் சரியானவற்றை, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி கண்டறிக.
அ) 1 மற்றும் 3 சரி ஆ) 2 மற்றும் 3 சரி இ) 1 மற்றும் 2 சரி ஈ) 1,2 மற்றும் 3 சரி

இ) வரிசை படுத்துக.

19. பண்டைக் காலத் தமிழகத்தின் நிர்வாகப் பிரிவுகள் ஏறுவரிசையில் இவ்வாறு அமைந்திருந்தது.
அ) ஊர் < நாடு < கூற்றம் < மண்டலம் ஆ) ஊர் < கூற்றம் < நாடு < மண்டலம்
இ) ஊர் < மண்டலம் < கூற்றம் < நாடு ஈ) நாடு < நாடு < மண்டலம் < ஊர்

## VI எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடையளி. 8 X 2 = 16

20. சங்க காலத்தோடு தொடர்புடைய இரு தொல்லியல் ஆய்விடங்களைக் குறிப்பிடுக.
21. காளிதாசரின் `மாளவிகாக்னி மித்ரம்' குறித்து சிறுகுறிப்பு வரைக.
22. மெய்க்கீர்த்தி பற்றி சிறுகுறிப்பு வரைக.
23. பஞ்சபாண்டவர் ரதங்கள் ஒற்றைக் பாறைக்கல் ரதங்கள் ஆகும் – விளக்குக.
24. மான்சூன் காலநிலை பற்றிச் சுருக்கமாக எழுதுக.
25. அட்சக்கோடுகள், தீர்க்கக் கோடுகள் என்பன யாவை?
26. பேரிடரின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டுத் தருக.
27. நிலச்சரிவு, பனிச்சரிவு – வேறுபடுத்துக.
28. மக்களாட்சி என்றால் என்ன?
29. கிராம சபைக் கூட்டம் நடைபெறும் நாட்கள் யாவை? அந்நாட்களின் சிறப்புகள் யாவை?
30. சாலை பாதுகாப்பு குறித்த முழக்கங்களை எழுதவும்.

SIVANANDHA K ,M.A.,B.Ed
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

## VII விரிவான விடையளி. 3 X 5 = 15

31. கரிகால் வளவன் மிகச் சிறந்த சோழ அரசனாகக் கருதப்படுகிறான். நிறுவுக. *(அல்லது)*
கட்டடக் கலைக்கு பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பைத் திறனாய்வு செய்க.
32. ஆசியாவில் காணப்படும் முக்கிய தாதுக்களைப் பற்றி விவரி. *(அல்லது)*
இந்தியாவின் திட்டநேரத்தைப் பற்றி விளக்குக.
33. நம் அரசமைப்புச் சட்டத்தின் சிறப்புகளாக நீ புரிந்து கொள்வன யாவை? *(அல்லது)*
கிராம மற்றும் நகர மேம்பாட்டிற்கு உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்காற்றுகின்றன. எவ்வாறு?

## VIII வரைபடத்தில் குறிக்கவும். 2 X 5 = 10

34. **கீழ்க்கண்ட எவையேனும் ஐந்து இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**
1) கன்னியாகுமரி 2) கலிங்கம் 3) பாடலிபுத்திரம் 4) சாஞ்சி
5) தட்சசீலம் 6) மதுரா 7) காந்தாரம்

35. **எவையேனும் ஐந்து இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.**
1) ஆசியா 2) ஐரோப்பா 3) நிலநடுக்கோடு 4) ஆர்டிக் வட்டம்
5) இந்தியப் பெருங்கடல் 6) ஆப்பிரிக்கா 7) பசிபிக் பெருங்கடல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com